


**17.03.2025**

<u>தலைப்புச்செய்திகள்</u>

1. இந்தியா - நியூசிலாந்து நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளை பிரதமர் திரு.நரேந்திர மோடி, நியூசிலாந்து பிரதமருடன் இன்று மேற்கொண்டார்.

2. போலி வாக்காளர் எண் உள்ளிட்ட பிரச்சனைகளில் விவாதத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதை கண்டித்து எதிர்கட்சி உறுப்பினர்கள் மாநிலங்களவையிலிருந்து இன்று வெளிநடப்பு செய்தனர்.

3. காஞ்சிபுரம் மாவட்டம் வெண்குடி அருகே பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணை கட்டப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

4. தமிழக சட்டப்பேரவைத்தலைவர் திரு. அப்பாவுக்கு எதிரான பதவிநீக்கம் கோரும் தீர்மானம் பேரவையில் தோல்வியடைந்தது.

5. ஸ்பெயினில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் - ஸ்பெயினின் ஃபேப்லோவை இன்று எதிர்கொள்கிறார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖

## பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி, நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனுடன் புதுதில்லியில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இருநாட்டு பிரதமர்கள் முன்னிலையில் இந்திய – நியூசிலாந்து நாடுகளுக்கு இடையிலான பல்வேறு புதிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

திரு. கிறிஸ்டோபர் லக்சன், குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவையும் இன்றுமாலை குடியரசு தலைவர் மாளிகையில் சந்தித்து பேசவுள்ளார்.

முன்னதாக கிறிஸ்டோபர் லக்சன், ராஜ்காட்டில் காந்தியடிகளின் சமாதியில் அஞ்சலி செலுத்தினார்.

5 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள திரு. கிறிஸ்டோபர் லக்சனின் பயணம் இருநாடுகளுக்கு இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்தி மக்கள் பரிவர்த்தனையையும், துறைகள் சார்ந்த உறவையும் மேலும் பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே பிரதமர் திரு. நரேந்திரமோடி “காலச்சக்கரம் - மக்கள் - அமைதி கிரகங்கள்” என்ற கருப்பொருளின் அடிப்படையிலான 3 நாட்கள் ரெய்சினா பேச்சுவார்த்தைகளை புதுதில்லியில் தொடங்கிவைக்கிறார்.

❖❖❖❖❖❖

## மாநிலங்களவை வெளிநடப்பு

போலி வாக்காளர் அடையாள அட்டை எண் உள்ளிட்ட பிரச்சனைகளில் விவாதத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, எதிர்கட்சி உறுப்பினர்கள் மாநிலங்களவையிலிருந்து இன்று வெளிநடப்பு செய்தனர்.

மாநிலங்களவை இன்று கூடியதும் அவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ், இப்பிரச்சனைகள் தொடர்பாக எதிர்கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்பு நோட்டீஸிற்கு அனுமதி மறுத்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், திமுக, திரிணமுல் காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதாதள், இடதுசாரி, ஆம்ஆத்மி கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டனர்.

உறுப்பினர்களை அமைதி காக்க அவை துணைத்தலைவர் விடுத்த வேண்டுகோளுக்கு யாரும் செவிமடுக்கவில்லை.

பின்னர் எதிர்கட்சி உறுப்பினர்கள் தங்களுக்கு அனுமதி தரப்படாததை கண்டித்து அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

முன்னதாக உடல்நலக்குறைவிலிருந்து மீண்ட அவைத் தலைவர் திரு. ஜக்தீப்தன்கர் தமது பொறுப்புகளை இன்று மாநிலங்களவையில் மீண்டும் தொடங்கினார்.

❖❖❖❖❖❖

## ஹர்ஷ் மல்ஹோத்ரா

கம்பெனி மற்றும் வங்கி திவால் சட்டத்தின் கீழ் 20 ஆயிரம் வழக்குகள் நிலுவையில் இருப்பதாக மத்திய கார்ப்பரேட் விவகாரத்துறை இணையமைச்சர் திரு. ஹர்ஷ் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், இவ்வழக்குகளை விரைந்து முடிப்பதற்கான பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

மின்னணு நீதிமன்றம், இணையவழி வழக்காடு மன்றங்கள், அமர்வுகள் மற்றும் உரிய பேச்சுவார்த்தைகள் இதில் அடங்கும் என்றார்.

சுமூக வர்த்தக சூழலை இலக்காக கொண்டு இலகுவான வணிக நடவடிக்கைகளை அரசு உருவாக்கி வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

<u>பங்கஜ் சவுத்ரி</u>

எஃகு மற்றும் அலுமினியத்திற்கு அமெரிக்கா விதித்துள்ள 25 சதவிகித இறக்குமதி வரியை மத்திய அரசு கவனத்துடன் ஆராயந்து வருவதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று எழுத்துபூர்வமாக அவர் அளித்த பதிலில் மருந்து மற்றும் செமி கண்டக்டர் பிரிவுகளில் இதுவரை எந்த வரியையும் விதிப்பதாக அமெரிக்கா அறிவிக்கவில்லை என்றார்.

எஃகு மற்றும் அலுமினியத்திற்கு அமெரிக்க அரசு விதித்த 25 சதவிகித இறக்குமதி வரி கடந்த 12-ம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

<u>ஜெகதாம்பிகா பால்</u>

வக்ஃப் வாரிய திருத்த மசோதா ஏழை இஸ்லாமிய மக்களின் நலனுக்கானது என்று இதற்கான நாடாளுமன்ற கூட்டுக்குழு தலைவர் திரு.ஜெகதாம்பிகா பால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இம்மசோதா தொடர்பாக பல்வேறு இஸ்லாமிய அமைப்புகளுடன் ஆலோசித்து சமச்சீரான சட்டத்தை வகுக்க நடைமுறைகள் மேற்கெள்ளப் படுவதாக எடுத்துரைத்தார்.

மத்திய அரசுக்கு எதிராக சிறுபான்மை மக்களை தூண்டிவிடும் வகையில் போலி தகவல்கள் பரப்பப்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

❖❖❖❖❖❖

<u>வர்ஷா கெய்க்வாட்</u>

மக்களவையில் ரயில்வே அமைச்சகத்தின் வரும் நிதியாண்டிற்கான மானிய கோரிக்கை மீதான விவாதம் இன்று தொடங்கியது.

இந்த விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திருமதி. வர்ஷா கெய்க்வாட், பயணிகளின் பாதுகாப்பு மற்றும் ரயில் விபத்துகள் குறித்து கேள்வியெழுப்பினார்.

இந்த விவாதத்தில் பங்கேற்று பேசிய பி.ஜே.பி. உறுப்பினர் திரு. ஜனார்த்தன் சிங், ரயில் கட்டமைப்பு நவீனமயம் மற்றும் பயணிகளின் பாதுகாப்பிற்கு 2 லட்சத்து 65 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை எடுத்துரைத்தார்.

100 புதிய அம்ரித்பாரத் ரயில்களும், 50 நமோபாரத் ரயில்களும், 200 வந்தேபாரத் ரயில்களும் இயக்கப்படுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

<u>தமிழக சட்டப்பேரவை : துரைமுருகன் :</u>

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதி வெண்குடி அருகே பாலாற்றின் குறுக்கே 78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தடுப்பணை கட்டப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்விநேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர், இத்திட்டத்தின் மூலம் 12 கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரம் கிடைப்பதோடு, 2 ஆயிரத்து 400 ஏக்கர் நிலம் பயனடையும் என்றார்.

பேரவையில் கேள்வி நேரத்தின் போது வெளியான மேலும் சில தகவல்கள் :

எ.வ. வேலு :

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் தொகுதியில் 2 கோடி ரூபாய் செலவில் சாலைப்பணிகள் நடைபெற்று வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

ஒன்றரை கோடி ரூபாய் செலவில் தரைப்பாலம் அமைக்கப்படுவதாகவும், 3.6கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்தப்படும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

போளூர் ஜமுனாமுத்து சாலையை அகலப்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

புதுக்கோட்டை நகருக்குள் வாய்ப்புகள் இருந்தால் 4 வழி சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

நேரு :

தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் 950 கோடி ரூபாய் செலவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நடைபெறுவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு மலையடிவாரத்தில் கடந்த 60 ஆண்டுகளாக வசித்து வரும் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்படும் என்று வருவாய்த்துறை அமைச்சர் **KKSSR** ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு ஊழியர்களுக்கான வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் சுமார் 60 வளாகங்களில் உள்ள 10 ஆயிரம் வீடுகளை இடிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

<u>அப்பாவு :</u>

பேரவை பதவிக்கு தேவையான கண்ணியம், கண்டிப்பு, கட்டுப்பாடு ஆகியவை பேரவைத்தலைவரிடம் திரு. அப்பாவு-விடம் உள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று அஇஅதிமுக சட்டமன்ற கட்சி துணைத்தலைவர் திரு.ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்ட 16 உறுப்பினர்கள், கொண்டு வந்த பதவிநீக்க கோரும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்

திரு. அப்பாவு கனிவானவர் என்றும், தமது கருத்துக்களை ஆணித்தனமாக எடுத்துக்கூறக் கூடியவர், ஜனநாயகத்தில் ஈடுபாடு கொண்டவர் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

எடப்பாடி. கே. பழனிசாமி

இத்தீர்மானத்தின் பேசிய எதிர்க்கட்சி தலைவர் திரு. எடப்பாடி. கே.பழனிசாமி, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பிரித்து பார்க்காமல், நடுநிலையுடன் நடந்துகொள்ள வேண்டிய பேரவைத் தலைவர், பாரபட்சமாக நடந்துகொள்வதாக குறைகூறினார்.

எதிர்க்கட்சிகள் சார்பில் கொடுக்கப்பட்ட பெரும்பாலான கவன ஈர்ப்பு தீர்மானங்கள், அவையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சி சார்பில் மக்கள் பிரச்சனைகளை பேச, அனுமதி அளிக்கப்படவில்லை என்றும்,

எதிர்கட்சி தலைவரின் உரை முழுமையாக ஒளிபரப்பப் படவில்லை என்றும் குறிப்பிட்டார்

முதலமைச்சரின் பதிலுரை மட்டும் முழுமையாக ஒளிபரப்பப் பட்டதாகவும் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி கூறினார்.

இதனையடுத்து பேரவைத்தலைவர் திரு.அப்பாவுக்கு எதிராக அஇஅதிமுக உறுப்பினர்கள் கொண்டுவந்த பதவி நீக்கம் கோரிய தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இதற்கு ஆதரவாக 63 உறுப்பினர்களும், எதிராக 154 உறுப்பினர்களும் வாக்களித்ததையடுத்த இந்த தீர்மானம் தோல்வியடைந்ததாக பேரவை துணை தலைவர் திரு.பிச்சாண்டி அறிவித்தார்.

பின்னர் அவையில் பேசிய பேரவைத்தலைவர் திரு. அப்பாவு, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் திமுக உறுப்பினர்கள் பேச 6 மணிநேரம் 33 நிமிடங்களும்,

அஇஅதிமுக உறுப்பினர்களுக்கு 12 மணிநேரம் 26 நிமிடங்களும் வாய்ப்பளிக்கப்பட்டதாக கூறினார்.

❖❖❖❖❖❖

<u>இரங்கல் தீர்மானம் :</u>

தமிழக சட்டப்பேரவையில் முன்னாள் உறுப்பினர்கள் பி.ஆர். சுந்தரம், கோவிந்தராஜுலு, வே.குணசீலன் ஆகியோருக்கு இறைவிற்கு இன்று இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பிரபல இருதய அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் கே.எம். செரியன் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

❖❖❖❖❖❖

அண்ணாமலை கைது

சென்னை எழும்பூரில் டாஸ்மாக் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு பாரதிய ஜனதா கட்சியினர் இன்று போராட்டம் நடத்தவிருந்த நிலையில் பி.ஜே.பி. தலைவர்கள் இல்லங்களில் போலீசார் குவிக்கப்பட்டு வீட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் தரமணியிலிருந்து டாஸ்மாக் அலுவலகத்தை முற்றுகையிட புறப்பட்ட கட்சியின் மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலையை நீலாங்கரை காவல்துறையினர் கைது செய்தனர்.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழர் நிதி நிர்வாகம் தொன்மையின் தொடர்ச்சியில் என்ற ஆவணத்தையும், அதற்கான இணைய பக்கத்தையும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில இன்று வெளியிட்டார்.

❖❖❖❖❖❖

பறவைகள் கணக்கெடுப்பு

நாகை மாவட்டம் கோடியக்கரை வனப்பகுதியில் உள்நாட்டில் வசிக்கும் நிலபறவைகள் கணக்கெடுக்கும் பணிகளில் 50-க்கும் மேற்பட்ட வனத்துறையினரும் கல்லூரி மாணாக்கரும் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

வேலூர் வாய்ஸ் :

வேலூர் மாவட்டத்தில் மத்திய அரசின் அடல் ஓய்வூதிய திட்டத்தில் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளதாக, மாவட்ட முன்னோடி வங்கி பொதுமேலாளர் திரு.ஜமால் மொய்தீன் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

அடல்பென்ஷன்

வேலூர் மாவட்டத்தில் மத்திய அரசின் அடல் ஓய்வூதிய திட்டத்தில் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளனர்.

இத்திட்ட பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

டென்னிஸ்

ஸ்பெயினில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் - ஸ்பெயினின் ஃபேப்லோவை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

<u>கபடி</u>

உலக கோப்பை கபடி போட்டி இங்கிலாந்தில் இன்று தொடங்குகிறது.

இன்றுமாலை 5.30 மணிக்கு நடைபெறும் முதல் போட்டியில் இந்திய ஆண்கள் அணி இத்தாலியை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖